செ.வெ.எண்.04-2019 நாள்:02.07.2019

# விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊரகவளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் குடிநீர் விநியோகம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

******

விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் குடிநீர் விநியோகம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் இன்று (02.07.2019) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாய்வில் பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் பசுமை வீடு திட்டம், தூய்மை பாரத இயக்கத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகள், சாலை மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் இதர பணிகள் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

ஊரகப் பகுதிகளில் ஏற்படும் தண்ணீர் பற்றாக் குறையை போக்கவும், குடிநீர் பிரச்சனைகள் பெரிய அளவில் ஏற்படாமல் ஆரம்ப நிலையிலேயே தவிர்திடவும், குடிநீர் விநியோகத்தில் ஏற்படும் மின் மோட்டார் பழுது, குடிநீர் குழாய் பழுது, நீர்மட்டம் கீழே செல்வது, மின் இணைப்புகள் பழுது போன்ற பழுதுகளின் விவரங்களை உடனுக்குடன் கண்டறிந்து பழுதுநீக்கம் செய்ய வேண்டும் எனவும் அனைவருக்கும் தடையின்றி குடிநீர் வழங்கிட வேண்டியுள்ளதால், தனிநபர்கள் எவரேனும் மோட்டார் வைத்து பொது குடிநீர் குழாய்களில் தண்ணீர் உறிஞ்சுதல், தோட்டப் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுதல், பள்ளங்கள் தோண்டி தண்ணீர் பிடித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்கள் மீது காவல்துறை மூலம் கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும் ஊரக பகுதிகளில் தனிநபர் இல்லங்களில் கழிப்பறைகள் கட்டுவதற்கான தேவையினை உருவாக்குவது மற்றும் கட்டப்பட்ட கழிப்பறைகள் தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதி செய்வது போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம் பானையங்கால் ஊராட்சியில் மின் உபரி நிதி பணிகள் 2018-19 திட்டத்தின்கீழ் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய திறந்தவெளிக் கிணற்றினையும், விளக்கூர் ஊராட்சியில் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் ஆழப்படுத்தப்பட்டுள்ள கிணற்றினையும், பிரதம மந்திரி கிராம இணைப்பு சாலைகள் 2016-17 திட்டத்தின்கீழ் ரூ.77.70 மதிப்பீட்டில் புக்குளம், புதுகேணி விளக்கூர் சாலை முதல் கொங்கராயபாளையம் வழியாக சித்தலூர் வரை போடப்பட்டுள்ள தார் சாலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் கள்ளக்குறிச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.ரெத்தினமாலா, வட்டார வளர்ச்சி அலுவலா் திரு.வி.கணேசன், திரு.கே.துரைசாமி, உதவி பொறியாளர்கள் திரு.அசோக்காந்தி, திருமதி.ஜெயந்தி, திருமதி.காந்திமதி, உதவி செயற்பொறியாளர்கள் திரு.புஷ்பராஜ், திரு.இளங்கோ, துணை வட்டார வளர்ச்சி அலுவலா் திரு.சையத் முகமது, பணி மேற்பார்வையாளர்கள் திரு.முத்துராமன், திரு.பச்சைமுத்து, திரு.குரு, திரு.பாலசுப்பிரமணியம் மற்றும் பலா் கலந்து கொண்டனர்.

---

செய்திவெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலர்,விழுப்புரம்.